Source: *Tamil Murasu,* p5
Date: 24 March 2022

# பல்கலையில் புதிய பேராசிரியர் பதவி

சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் யோங் லூ லின் மருத்துவப் பள்ளியில் நீண்டகால பொதுச் சேவை ஆற்றிய பிலிப் இயோ பெயரில் ஆய்வுப் பேராசிரியர் பதவி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அந்தப் பதவி மூலம் அரசியல், பொதுச் சுகாதாரம், சமூகம், கலாசாரம், தொழில் நுட்பத் துறைகளின் ஆற்றல்கள் சேர்ந்து சுகாதாரத் தீர்வுகள் ஏற்பட வழி கிடைக்கும் என்று இந்தப் பல்கலைக் கழக மருத்துவக் கல்வித் துறைத் தலைவர் பேராசிரியர் சோங் யாப் செங் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.